JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }
Miscellaneous } Case No : - CC// 563/2024
: Prosecution P.W - 57

NAME : மரியஅருள்ராஜன்
FATHER'S NAME :
VILLAGE :
TALUK :
CASTE :
CALLING :
RELIGION :
AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 24.02.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் வயது முதிர்வு காரமணாக வேலை எதுவும் பார்க்கவில்லை. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளிடம்தான் நான் சீட்டு போட்டிருந்தேன். அசா.1 கிருஷ்ணன் என்பவரை தெரியும். அசா.2 அந்தோணிராஜ் என்பவரை தெரியும். அசா.3 டேவிட் அமல்ராஜ் அசா.4 செல்வராஜ் அசா.5 ஜோசப்ராஜ் என்பவரை தெரியும். அசா.6 அருமைகிளி யை தெரியாது. அசா.7 பாலமுருகன் . அசா,8 செல்வராணி என்பவரை தெரியும். அசா.9 பூங்கொடி சூசை தெரியும் அசா.10 சீதாலெட்சுமி தெரியாது. அசா.11 ராமலெட்சுமி தெரியும். அசா.12 பொன்பாண்டியை தெரியாது. அசா.13 சாந்தியை தெரியும். அசா.14 குணசீலன் தெரியும். அசா.15 முத்துலெட்சுமி அசா.16 செல்வகுமாரி ஆகியோர்களை தெரியாது அசா.17 முருகன் தெரியும். அசா.18 ராமர் மனைவி சரோஜா தெரியாது. அசா.19 குமரேசன் தெரியும். அசா.20 மணிராஜ் தெரியாது. அசா.21 பொன் சேகர் தெரியாது. அசா.22 சுதா அசா.23 ரவிகுமார் தெரியாது அசா.24 ஜெயஜோதி தெரியாது, அசா.25 ஜானகி அசா.26 பவளக்கொடி தெரியாது. அசா.27 தெய்வகனியை தெரியும். அசா.28 செல்வன் தெரியும். அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் தெரியும். அசா.30 அருள்ஜெலஸ்டீன் தெரியும். அசா.31 அன்னபூரணியை தெரியாது. அசா.32 ஜோசப்

அந்தோணி ராஜ் தெரியும். அசா.33 முத்துக்கனியை தெரியாது. அசா.34 வசுமதி அசா.35 இருளப்பன் தெரியாது. அசா.36 முருகன் தெரியும். அசா.37 கெலன் ஞானபிரகாசம் தெரியாது, அசா.38 மரியசுந்தரி ஆகியோர்களை தெரியாது அசா.39 தேன் மொழி தெரியும். அசா.40 புஷ்பவள்ளி தெரியாது. அசா.41 விஜய் தெரியும். அசா.42 சரோஜா தெரியாது. அசா.43 பாலமுருகன் தெரியும். அசா.44 காளீஸ்வரி தெரியாது. அசா.45 கனகமணி, அசா.46 சகுந்தலா தெரியாது, அசா.47 ஞானப்பிரகாசம் தெரியாது. அ.சா.48 சேர்மக்கனியை தெரியும், அ.சா.49 மூக்கம்மாள் தெரியும் அசா.50 முருகன் அசா.51 ஐயப்பன் தெரியும். அசா.52 கவிதா தெரியாது. அசா.53 யோகேஸ்வரி தெரியாது. அசா.54 குமார் தெரியும். அசா.55 சரஸ்வதி பாப்பா என்பவரை தெரியும். அசா.56 திருமலை என்பவரை தெரியும். கடந்த 7 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிகளிடம் நான் சீட்டு போட்டிருந்தேன். ஆஜர் எதிரிகள் 7 குழுக்களாக சீட்டு பிரித்தார்கள். நான் ரூ.62000 சீட்டில் 1 சீட்டு போட்டிருந்தேன். சீட்டு பணத்தை ஞாயிற்றுக்கிழமை தோறும் இரவு 8.00 மணியளவில் மாயவன் கோவிலுக்கு சென்று சீட்டு பணத்தை கொடுப்பேன். சீட்டு பணத்தை நான் கொடுக்கும் போதேல்லாம் எதிரிகள் வரவு வைத்து கொள்வார்கள். அதன்பின்னர் சீட்டு பிரிக்கவில்லை. ரூபாயை தரவும் இல்லை. நான் 118 சீட்டுகள் கட்டிருந்தேன். நான் 59 ஆயிரம் ரூபாய் கட்டிருந்தேன். நான் பணத்தை கேட்டப்போது ரூபாய் இல்லை என்று சொல்லிவிட்டார்கள். நம்பிக்கையின் பேரில் எதிரிகளிடம் நான் சீட்டு போட்டிருந்தேன். தற்போது வரை நான் கட்டிய பணம் எனக்கு திரும்ப கிடைக்க வில்லை. நடவடிக்கை எடுக்க யார் புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

7 குழுக்களாக 62000 ஆயிரம் ரூபாய் சீட்டு நடத்தினார்கள். நான் மொத்தம் 59000/- ரூபாய் கட்டியுள்ளேன். சீட்டு எப்போது ஆரம்பித்தார்கள் என்றால் முன்பே ஆரம்பித்து விட்டார்கள். 62000 ஆயிரம் ரூபாய் சீட்டில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் என்றால் தெரியாது. சீட்டு பணம் கிடைக்காததால் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் மனுவில் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். போலீசார் அதன்பின்பு என்னை விசாரிக்கவில்லை என்றாலும், தற்போது தான் அழைத்து வந்தார்கள் என்றாலும் சரிதான். நான் எவ்வளவு சீட்டு போட்டேன் எவ்வளவு பணம் செலுத்தினேன் என்ற விவரம் போலீஸ் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், எதிரிகளோ அவர்களுக்கு வேண்டப்பட்டவர்கள் யாருமோ தனிப்பட்ட

முறையில் சீட்டு நடத்தப்படவில்லை என்றாலும், போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.
மறுவிசாரணை – இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi